# MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED ON 25.05.2017 AT GOPALSAMY NAIKAR MARRIAGE HALL, VILLIANUR FOR THE PROPOSED AUGMENTATION OF LPG STORAGE CAPACITY FROM 300 MT TO 900 MT BY INSTALLING 2 X 300 MT MOUNDED STORAGE UNIT AT THE EXISTING LPG BOTTLING PLANT AT ODIYAMPET, VILLIANUR, PUDUCHERRY BY M/S. INDIAN OIL CORPORATION LIMITED

Public Hearing commenced at 11.00 AM with Dr. Satyendra Singh Dursawat, I.A.S., District Collector in the Chair.

Dr. N. Ramesh, Environmental Engineer, Department of Science, Technology and Environment /Puducherry Pollution Control Committee welcomed the gathering and outlined the procedure for Public Hearing. He said that M/s. Indian Oil Corporation Limited (IOCL) has proposed to increase the LPG Storage capacity from 300 MT to 900 MT by installing additional 2 x 300 MT mounded Storage unit in the existing Indane Bottling Plant located at Odiyampet, Villianur, Puducherry. As per the Environment Impact Assessment (EIA) Notification, 2006 notified by the Ministry of Environment, Forests and Climate Change, Government of India, the project proponent has applied for Environmental clearance to the concerned authority. As a part of the procedure for Environmental Clearance, the Public Hearing is being conducted after giving wide advertisement in leading Tamil and English News Paper and PPCC website before 30 days. He stated that the copies of Environment Impact Assessment Report, Risk Analysis Report and Executive Summaries were hosted in PPCC web site and also made available for public in the office of the District Collector, Local Administration Department, Villianur Commune Panchayat, District Industries Centre, Regional office of the Ministry of Environment, Forest and Climate Change, South Eastern Zone, Chennai and PPCC.

Then, District Collector invited the representatives of the industry to explain about the present project.

On behalf of IOCL, Dr. G. Pandian, Senior Plant Manager and Shri. M. Vinoth Environment Consultant, M/s. Ultra Tech made a detailed presentation about the project proposal. They said that the Indane Bottling Plant was established in the year 1993 and functioning for the past 24 years with all safety measures and without any accident. Since the demand for LPG cylinders is increasing day by day, it is proposed to increase the LPG

storage capacity in the plant. They said that the two number of 300 MT bullets proposed to be installed under the present project are mounded bullets and are completely safe. They explained about the industrial process, safety aspects, water requirement, pollution aspects, monitoring results of air, water and soil quality in the surroundings and findings of Environmental Impact Assessment report. They said that Risk Assessment was carried out for the project using Computerized Modeling for various hazard scenarios and it is observed that the Risk due to the present project is within acceptable limits and there will not be any impact on the surroundings. They also briefed about the CSR activities carried out by the industry in Puducherry.

Following the presentation, the District Collector invited the public to express their views, concerns and questions, if any by clearly indicating their name and the village to which he / she belongs to.

The views, of the public and clarification given by the project proponent are detailed below:

I. **Thiru. C. Ramesh, Social Worker, Kanuvapet, Villianur:**

1. The industry is situated in Odiampet which falls under Thirukanchi Revenue Village. The information about public hearing has not reached all the 20 villages in this surroundings. Giving advertisement in News Paper alone is not sufficient. Public announcement should have been made in the surrounding villages. Even the M.L.A.s of the two constituencies in this area were not aware of the public hearing. Since the industry is proposing to increase the LPG storage capacity to 900 MT, this is a hazardous project. This Public Hearing should be postponed and conducted again after informing the people of all surrounding villages properly.
2. When this plant was started in 1993, the industry promised that they will provide job opportunities, drinking water, road, playground and other facilities to the surrounding villages. But they have failed to do it. The ground water quality has become saline in the village in which the plant is located. Instead of, providing drinking water facilities for the local village the industry is setting up R.O. plant for drinking water purpose at Karikalampakkam Village which is located 5 km away.
3. Most of the LPG load from this plant (about 21-22 load) is being sent to Tamil Nadu for sale. Only 7-8 load is allotted for Puducherry. Moreover, the Indane distributors in

Puducherry are very less compared to other LPG companies. Hence there is no benefit for Puducherry due to the present expansion proposal.

4. At about 50 meters from this plant Shankara Vidhalaya School is present. At about 500 meters distance from this plant Cluny school is present. How was permission given to these schools near this hazardous industry? Who will be responsible in case of any accident that would occur in the industry? Either the school or the industry should be banned.
5. The industry has not given any employment to the local people.
6. We welcome the project subject to proper redressal of above points.

**Response of Project Proponent - Dr. G. Pandian, Senior Plant Manager:**

1. The due procedure regarding announcement of Pubic Hearing stipulated in the Environment Impact Assessment Notification was followed by Puducherry Pollution Control Committee officials.
2. IOCL had initially proposed to setup the R.O plant in Villianur only for providing drinking water to the public. Since, Government officials informed that it is proposed to close that borwell as water quality in the borwell was not fit for drinking, based on Government request the R.O. plant was then setup in Karikalampakkam village.
3. IOCL has given employment to more than 40 persons from surrounding villages like Thirukanchi and Uruvayaru.
4. If any hazardous incidence occurs in the plant its impact will be only within the plant boundary. There will be no impact on the schools located in the surrounding.
5. The Explosives Department from Nagpur conducts annual inspection of the plant. OISD and MDT also conduct frequent surprise inspections. The industry functions following all the norms laid by these authorities.

**II. Thiru. S. Vijayakumar, Thilai Nagar, Villianur:**

1. All the public were not informed about the meeting. Is it sufficient if information is given through news paper advertisement alone? Advertisement should have been made in public places through loudspeakers.
2. On the North East side of the factory a residential layout is being developed.
3. The industry has not conducted any medical camp for the local villagers.

**Response of Project Proponent - Dr. G. Pandian, Senior Plant Manager:**

IOCL has conducted many medical camps for the local public. In the year 2014, a medical camp was organized in Vidhyashram school near the plant through PIMS hospital where nearly 650 nos. of local villagers got treatment.

**Response of Project Proponent – Smt. K. Prema, Senior Manager (LPG Sales):**

1. The objective of IOCL is to ensure that the LPG cylinders are supplied to the public continuously without any delay. At times, when there is some disruption in the supply of LPG to the bottling plant due to stoppage of LPG Bulk Truck movement or other reasons, continuous supply of cylinders to the public can be ensured only if there is adequate storage capacity within the plant. Hence it is proposed to increase the LPG storage capacity.
2. Such industry cannot be established without following due safety norms. Only after obtaining license from PESO to store and handle LPG such plants can be established. PESO will continuously monitor the safety aspects of the industry and renew the license.
3. Regarding supply of LPG cylinders to other states, first preference is given to Puducherry only. The balance is only sent to other states.
4. The purpose of IOCL is to supply LPG cylinders to the public continuously without any delay. Apart from this, the company is also taking up CSR activities. If there is any demand from the surrounding villages for activities that could be taken up under CSR, the same will be considered.

**III. Thiru. S. Vijayakumar, Odiampet:**

Accidents can happen at any time. If any accident similar to the nuclear accident that occurred in Japan in 2011 occurs in the industry due to vapour cloud explosion how will the industry handle it.

**Response of Project Proponent - Shri. M. Vinoth, Environment Consultant:**

Since the LPG Storage Bullets are mounded bullets there is no chance of leakage of gas from this. Further, IOCL has installed adequate gas sensors around the plant. Any gas leak will be immediately detected and the safety systems will be automatically actuated. The unit has adequate water storage for fire fighting and hydrant systems. Since, LPG is a dense gas it will tend to spread at ground level only and will not

disperse into air. Hence any leakage will be immediately detected and controlled within the plant boundary limits. There will not be any impact on the surroundings.

**IV. Smt. K. Thilakavathi, National Awardee Teacher and President, Oulgaret Commune Consumer Forum:**

1. We should see whether the school came first or industry came first in this area. The industry only came first. Therefore, it is the responsibility of the school authorities to take adequate safety precautions. The industry should not be blamed.
2. We take several measures to save the goods required for us. To avoid food scarcity during rainy days, we build godowns to save the food. This project is similar to this. The industry is planning to increase the LPG storage capacity so that LPG cylinders will be supplied to the public without any hindrance even during crisis situations. Puducherry will get unhindered supply of LPG cylinders due to this project. Hence this project is welcome one.
3. It is not wrong to supply the cylinders manufactured in this Puduchery unit to other states. We have been asking other states to supply water to us and this is similar to that. Every State is depending on other states for some or other needs.
4. IOCL has asked 48 consumer forum like us in Puducherry to create public awareness on LPG savings. Now we will also be doing camps to create public awareness on the importance of such LPG industries and their safety aspects.

**V. Thiru. N. Arun, Puducherry Science Forum:**

1. LPG is one of the essential commodities. Since the population is increasing day by day, the LPG industries are bound to increase their capacities.
2. The industry should have in place adequate safety measure and try to remove the apprehension of the public on the safety aspects of the industry.
3. LPG cylinders are brought from other States to Puducherry by many distributors. Similarly IOCL is sending the Indane LPG cylinders to other states. There is nothing wrong in it.

**VI. Thiru. S.K. Yuvarasa, Karikalampakkam:**

1. IOCL is operating in Puducherry for the past 24 years without any problems.
2. Since the demand for LPG is increasing day by day, such projects which are for public benefit should be welcomed.

3. The industry should conduct awareness campaign in the surrounding villages about the industry and its safety aspects.

**VII. Thiru. M. Sivashankar, President, Puducherry Traders Federation:**

1. We should welcome new industries to Puducherry. Industries which are already functioning like this, should be encouraged to develop further. There were 10,000 industries in Puducerry in the past. About 9250 industries have left Puducherry and only 750 is functioning now.
2. In places where such LPG industries are not there, it takes atleast 10 days for supply of LPG cylinders to the public. In Puducherry, LPG cylinder is supplied within 2 to 3 days.
3. This industry is functioning in an industrial area for the past 24 years. Some schools were started in the vicinity 2 years back. Since this is industrial area development of existing industries should not be hindered.

After obtaining the views of the public, the District Collector instructed the industry to suitably attend to the concerns raised by the public and also to obtain all necessary clearances from the local authorities before commencing the project.

Then, the Environmental Engineer of Department of Science, Technology and Environment / Puducherry Pollution Control Committee read out the proceedings of the Public Hearing. Dr. R. Sagaya Alfred, Senior Scientific Officer, Department of Science, Technology and Environment / Puducherry Pollution Control Committee concluded the Public Hearing with vote of thanks.

Copy of list of public who attended the Public Hearing, News paper advertisement copy and the recorded video (CD) of the entire proceedings are enclosed.

**Dr. Satyendra Singh Dursawat, I.A.S.**
**District Collector**
**Puducherry District, Puducherry**

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து, ஒதியம்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் இன்டேன் பாட்டிலிங் ஆலையில் சமையல் எரிவாயுவின் சேமிப்பு கொள்ளளவை 300 மெட்ரிக் டன்னிலிருந்து 900 மெட்ரிக் டன்னாக உயர்த்துவதற்கு புதியதாக 2 x 300 மெட்ரிக் டன் உயர்மட்ட சமையல் எரிவாயு கொள்கலன்களை நிறுவும் திட்டத்திற்காக 25.05.2017 அன்று வில்லியனூர், கோபால்சாமி நாயக்கர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தின் நடவடிக்கை விவரங்கள்

பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் 25.05.2017 அன்று காலை 11.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் Dr. சுத்யேந்திர சிங் துர்சாவட், I.A.S., அவர்கள் தலைமையில் தொடங்கியது.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை மற்றும் புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமத்தின் சுற்றுச்சூழல் பொறியாளர் முனைவர் N. ரமேஷ் அவர்கள் குழுமியிருந்த அனைவரையும் வரவேற்று பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தின் விதிமுறைகளை எடுத்துரைத்தார். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் (IOCL) புதுச்சேரி, ஒதியம்பட்டில் அமைந்துள்ள தனது இண்டேன் பாட்டிலிங் ஆலையில் புதியதாக இரண்டு 300 மெட்ரிக் டன் சேமிப்பு கொள்ளளவுள்ள உயர்மட்ட கொள்கலன்களை நிறுவுவதின் மூலம், சமையல் எரிவாயு (LPG) சேமிப்பு கொள்ளளவை தற்போதுள்ள 300 மெட்ரிக் டன்னில்லிருந்து 900 மெட்ரிக் டன்னாக அதிகரிக்க திட்டமிட்டுள்ளது. இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீடு அறிவிப்பு, 2006-ன் படி, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் சுற்றுச்சூழல் அனுமதி சான்றிதழ் பெற மத்திய அமைச்சகத்திடம் விண்ணப்பித்துள்ளது. சுற்றுச்சூழல் அனுமதி சான்றிதழ் வழங்கும் செயல்முறையின் ஒரு பகுதியாக, பாதிக்கப்பட்ட உள்ளூர் மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள இந்த பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறுகிறது. இந்த கூட்டம் குறித்த அறிவிப்பு பொதுமக்களை சென்றடையும் வகையில் தமிழ் மற்றும் ஆங்கில செய்தித்தாள்களில் புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு இணையதளத்திலும் 30 நாள்களுக்கு முன்பாக வெளியிடப்பட்டது.

இத்திட்டம் குறித்த வரைவு சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீடு அறிக்கை மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீடு சாராம்ச அறிக்கையின் நகல்கள் புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டது. மேலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து அலுவலகம், மாவட்டதொழில் மையம், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் சென்னை அலுவலகம், புதுச்சேரி மாசுகட்டுபாட்டு குழும அலுவலகத்திலும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது என்று அவர் கூறினார்.

அதன்பிறகு, மாவட்ட ஆட்சியர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவன பிரதிநிதிகளை திட்டத்தின் விவரங்கள் குறித்த விரிவாக எடுத்துரைக்குமாறு அழைத்தார்.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் சார்பாக முனைவர் G. பாண்டியன், முதுநிலை ஆலை மேலாளர் அவர்களும், திரு. M. வினோத், சுற்றுச்சூழல் ஆலோசகர், அல்ட்ராடெக் அவர்களும், தொழிற்சாலையின் விரிவாக்க திட்டம் குறித்து தெளிவாக விளக்கினர். இந்த தொழிற்சாலை 1993 ல் தொடங்கப்பட்டது. சுமார் 24 ஆண்டுகளாக உரிய பாதுகாப்பு அம்சங்களுடன் எந்தவித பாதிப்பும் இல்லாமல் இயங்கி வருவதாக கூறினர். சமையல் எரிவாயு சிலிண்டருக்கான தேவை நாளுக்குள் நாள் அதிகரித்து வருவதால் புதியதாக இரண்டு 300 மெட்ரிக் டன் சேமிப்பு கொள்ளளவுள்ள உயர்மட்ட கொள்கலன்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கொள்கலன்கள் பாதுகாப்பு நிறைந்த உயர்மட்ட கொள்கலன்களாகும். மேலும், தொழிற்சாலையின் செயல்முறைகள், பாதுகாப்பு அம்சங்கள், நீர் உபயோகம், மாசுக்கட்டுப்பாடு, சுற்றுப்புற சூழலில் உள்ள காற்று, நீர், மண்ணின் தன்மை குறித்து மேற்கொண்ட ஆய்வு மற்றும் இத்திட்டத்தால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் தாக்க அறிக்கையின் விவரங்கள் குறித்து விரிவாக எடுத்துறைத்தனர். தொழிற்சாலையின் ஏற்படும் விபத்துக்களால் ஏற்படக்கூடிய பாதிப்பின் வரையளவு குறித்து கணிணி மென்பொருள் மூலம் ஆய்வு செய்யப்பட்டு இத்தகைய ஆபத்துக்களின் வரையளவு

ஏற்கக்கூடிய அளவிற்குள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது எனவும், இதனால் சுற்றியுள்ள பகுதிகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது எனவும் கூறினர். மேலும் IOCL நிறுவனம் சார்பாக சமுதாய நலத்திற்காக ஆற்றப்படும் திட்டங்கள் குறித்தும் கூறினார்.

அதனை தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அவர்கள் பொது மக்களை தங்கள் பெயர் மற்றும் ஊர் குறிப்பிட்டு, திட்டம் சம்மந்தமான ஐயங்கள், விளக்கங்கள் மற்றும் கருத்துக்கள் ஏதுமிருப்பின், ஒவ்வொருவராக எடுத்துரைக்க கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து, பொதுமக்கள் கூறிய கருத்துக்களும் அதற்கு தொழிற்சாலை அதிகாரிகள் அளித்த விளக்கமும் பின்வருமாறு:

**I.** திரு. C. ரமேஷ், சமூக சேவகர், கணுவாப்பேட்டை, வில்லியனூர்

1. இந்த தொழிற்சாலை அமைந்துள்ள ஒதியம்பட்டு கிராமம், திருக்காஞ்சி வருவாய் கிராமத்தின் கீழ் வருகிறது. சுற்றியுள்ள 20 கிராம மக்களுக்கும் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் குறித்து தெரியப்படுத்தவில்லை. செய்திதாளில் விளம்பரம் கொடுத்தால் மட்டும் போதாது. கிராமங்களில் பொது அறிவிப்பு செய்து இருக்க வேண்டும். இந்த பகுதியில் உள்ள இரண்டு சட்டமன்ற தொகுதி உறுப்பினர்களுக்கும் இது குறித்து தகவல் தெரிவிக்கப்படவில்லை. சமையல் எரிவாயு சேமிப்பு கொள்ளளவு 900 டன்னாக அதிகரிக்கப்படுகிறது. இது ஆபத்தான திட்டம் என்பதால் இந்த கூட்டத்தை தள்ளி வைத்துவிட்டு சுற்றியுள்ள கிராம மக்கள் அனைவருக்கும் தெரியப்படுத்தி, மறுகூட்டம் நடத்தப்படவேண்டும்.
2. இத்தொழிற்சாலை 1993-ல் தொடங்கியபொழுது உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு, குடிநீர், சாலை, விளையாட்டு திடல் போன்ற அத்தியாவசிய வசதிகளை செய்து கொடுப்போம் என்று கூறினர். ஆனால் எதுவும்

செய்யவில்லை. இத்தொழிற்சாலை அமைந்துள்ள கிராமத்தின் நிலத்தடிநீர், உப்புநீராக மாறி குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இங்கு குடிநீர் வசதி செய்வதற்கு பதிலாக இவர்கள் 5. கி.மீ. தொலைவில் உள்ள கரிக்கலாம்பாக்கத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் (R.O. Plant) அமைக்கிறார்கள்.

3. இந்த தொழிற்சாலையில் தயாராகும் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் பெரும்பகுதி (21-22 வாகனம்) தமிழ்நாட்டிற்கு அனுப்பப்படுகிறது. புதுச்சேரிக்கு அளிக்கப்படும் சிலிண்டர்கள் குறைவான அளவில்தான் (7-8 வாகனம்) உள்ளது. புதுச்சேரியில் மற்ற நிறுவனங்களின் சமையல் எரிவாய்வு விநியோகஸ்தர்களை விட இண்டேன் விநியோகஸ்தர்கள் குறைவாகதான் உள்ளனர். எனவே இந்த விரிவாக்க திட்டத்தினால் புதுச்சேரிக்கு அதிகம் பலனில்லை.

4. இந்த தொழிற்சாலைக்கு அருகில் 50 மீட்டர் தூரத்தில் சங்கரவித்யாலயா பள்ளிக்கூடமும், 500 மீட்டர் தூரத்தில் குளூனி பள்ளிக்கூடமும் உள்ளது. இந்த ஆபத்தான தொழிற்சாலைக்கு அருகில் பள்ளிக்கூடங்களுக்கு எப்படி அனுமதியளிக்கப்பட்டது? மாணவர்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் யார் பதில் சொல்வார்கள்? பள்ளிக்கூடம் அல்லது தொழிற்சாலையை தடை செய்ய வேண்டும்.

5. வேலைவாய்ப்பு எதுவும் உள்ளூர் மக்களுக்கு கொடுக்கப்படவில்லை.

6. இந்த திட்டத்தை வரவேற்கிறோம் ஆனால் மேற்கூறிய குறைகளை நிவர்த்தி செய்யவேண்டும்.

<u>தொழிற்சாலை அதிகாரிகள் பதில்:</u>
முனைவர் G. பாண்டியன், முதுநிலை ஆலை மேலாளர்

1. பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கான அறிவிப்பு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அரசாணையின்படி புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுவால் முறையாக செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டது.

2. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் (R.O. Plant) ஒன்றை வில்லியனூரில் நிறுவமுன்வந்தது. ஆனால் அரசு அதிகாரிகள் வில்லியனூரில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் குடிநீர் தரமாக இல்லாததால் முடப்போவதாக கூறினர். எனவே அரசின் அறிவுறுத்தல்படி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகில் உள்ள கரிக்கலாம்பாக்கத்தில் அமைக்கப்பட்டது.

3. இந்தத் தொழிற்சாலையில் சுற்றியுள்ள திருக்காஞ்சி, உறுவையாறு கிராமத்தை சேர்ந்த நாற்பதற்கும் மேற்பட்ட கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

4. இந்த தொழிற்சாலை கடந்த 24 வருடங்களாக எந்தவித பாதிப்பும் இல்லாமல் செயல்பட்டு வருகிறது. இப்பொழுது சமையல் எரிவாயுவின் சேமிப்பு கொள்ளளவுதான் அதிகரிக்கப்படுகிறது. இது 100 சதவீதம் பாதுகாப்பான தொழிற்சாலையாகும். தொழிற்சாலை பாதுகாப்பிற்கான அனைத்து உபகரணங்களும் நிறுவப்பட்டுள்ளது. எந்தவிதமான விபத்துக்களையும் பாதிப்பு இல்லாத வகையில் எங்களால் கையாளமுடியும்.

5. தொழிற்சாலையில் ஏதேனும் விபத்து ஏற்பட்டால் அதன் தாக்கம் தொழிற்சாலை எல்லைக்குள்தான் இருக்கும். சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

6. நாக்பூரில் உள்ள வெடிபொருள் கண்காணிப்பு துறை ஆண்டுக்கொருமுறை பாதுகாப்பு ஆய்வு நடத்துகிறது. மத்திய அரசின் OISD மற்றும் MDT அமைப்பும் தொழிற்சாலையில் திடீர் ஆய்வு மேற்கொள்கிறார்கள். இந்த துறைகளின் பாதுகாப்பு வரைமுறைகளுக்கு உட்பட்டு தொழிற்சாலை இயங்குகின்றது.

II. திரு. S. விஜயகுமார், தில்லை நகர், வில்லியனூர்

1. இக்கூட்டம் குறித்து அனைத்து பொதுமக்களுக்கும் தெரியப்படுத்தவில்லை. செய்தித்தாளில் விளம்பரம் செய்தால் மட்டும் போதுமா? பொது இடங்களில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்திருக்க வேண்டும்.
2. இத்தொழிற்சாலையின் வடகிழக்கு பகுதியில் குடியிருப்பு பகுதி ஒன்று அமைக்கப்படுகிறது.
3. மருத்துவ முகாம் எதுவும் தொழிற்சாலையால் உள்ளூர் மக்களுக்கு நடத்தப்படவில்லை.

தொழிற்சாலை அதிகாரிகள் பதில் :
முனைவர் G. பாண்டியன், முதுநிலை ஆலை மேலாளர்

உள்ளூர் மக்களுக்காக இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் பல மருத்துவமுகாம்களை நடத்தியுள்ளது. கடந்த 2014 ஆம் ஆண்டு ஒதியம்பட்டில் உள்ள வித்யாஸ்ரம் பள்ளியில் PIMS மருத்துவமனை மூலம் எங்கள் தொழிற்சாலை நடத்திய மருத்துவமுகாமில் 650 பேர் சிகிச்சை பெற்றனர்.

தொழிற்சாலை அதிகாரிகள் பதில்:
திருமதி K. பிரேமா, முதுநிலை மேலாளர் (சமையல் எரிவாயு விற்பனை)

1. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் நோக்கம் பொதுமக்களுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை குறுகிய காலத்தில் தடையில்லாமல் அளிப்பதுதான். சில தவிர்க்க முடியாத காலகட்டங்களில் தொழிற்சாலைக்கு சமையல் எரிவாயு ஏற்றிவரும் டிரக்குகள் வருவதற்கு தடங்கல் ஏற்படும்போது, பொதுமக்களுக்கு தடையில்லாமல் சமையல் எரிவாயு கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் தற்போது சேமிப்பு கொள்கலன்களின் கொள்ளளவு திறனை அதிகரிக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

2. பாதுகாப்பு அம்சங்கள் முழுமையாக இல்லாமல் இத்தகைய தொழிற்சாலையை நிறுவ முடியாது. சமையல் எரிவாயுவை கையாள்வதற்கும், சேமித்த வைப்பதற்கும் PESO அமைப்பின் அங்கீகாரம் பெற்ற பின்னரே இத்தகைய தொழிற்சாலையை நிறுவமுடியும். இந்த அமைப்பு தொழிற்சாலையின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து தொடர்ந்து ஆய்வு செய்து உரிமத்தை புதுப்பிக்கும்.

3. இத் தொழிற்சாலையில் தயாராகும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வழங்குவதில் புதுச்சேரிக்கு தான் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பிறகுதான் மற்ற மாநிலங்களுக்கு வழங்கப்படுகிறது.

4. பொதுமக்களுக்கு தடையில்லாமல் சமையல் எரிவாயு வழங்குவதே இந்த நிறுவனத்தின் முதல் குறிக்கோளாகும். இத்துடன் பொதுமக்களுக்கு தேவையான மற்ற சமுதாய நலத்திட்டங்களையும் எங்கள் நிறுவனம் செய்யத் தயாராக உள்ளது. சுற்றுப்புற கிராம மக்கள் தங்கள் தேவைகள் குறித்து கோரிக்கைகளை முறையாக அளித்தால் அது பரிசீலிக்கப்படும்.

III. திரு. S. விஜயக்குமார், ஒதியன்பேட்

விபத்துக்கள், எப்பொழுது வேண்டுமானால் நடக்கலாம், 2011 ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற நியூக்கிளியர் பேரழிவு போல் இந்த தொழிற்சாலையிலும் LPG ஆவி முட்டம் வெடித்துச் சிதறுவதால் பேரழிவு ஏற்பட்டால், தொழிற்சாலை எப்படி கையாளும்?

தொழிற்சாலை அதிகாரிகள் பதில்:

திரு M. வினோத், சுற்றுச்சூழல் ஆலோசகர்

சமையல் எரிவாயு சேமிப்புக் கொள்கலன்கள் அனைத்து பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய உயர்மட்ட கொள்கலனாக நிறுவப்படுவதால் இதில் இருந்து எரிவாயு கசிய வாய்ப்பில்லை. மேலும் தொழிற்சாலையின்

அனைத்து பகுதிகளிலும் எரிவாயு கசிவை கண்டுபிடிக்கும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. அவ்வாறு கசிவு ஏற்பட்டால் விபத்தை தடுக்கும் சாதனங்கள் தானியியங்கி மூலம் உடனடியாக செயல்படத் தொடங்கும். தேவையான அளவு தீயனைப்பிற்கு தேவையான நீர் வசதியும், தீயணைப்பு சாதனங்களும் உள்ளது. மேலும் சமையல் எரிவாயு அடர்த்தியான வாயுவாகும். இது தரை மட்டத்திலேயே பரவும். எனவே எந்தவிதமான பாதிப்பும் தொழிற்சாலை எல்லைக்கு உள்ளாகவே கட்டுப்படுத்தப்படும். சுற்றியுள்ள பகுதிகள் எந்த விதத்திலும் பாதிக்கப்படாது.

IV. திருமதி K. திலகவதி, தேசிய விருது பெற்ற ஆசிரியை, தலைவர், உழவர்கரை கொம்யூன் நுகர்வோர் அமைப்பு:

1. நாம், இந்தப் பகுதியில் முதலில் தொழிற்சாலை வந்ததா இல்லை பள்ளிக்கூடம் வந்ததா? என்பதை பார்க்கவேண்டும். தொழிற்சாலைதான் முதலில் வந்தது. எனவே பள்ளிக்கூட நிர்வாகிகள்தான் தங்கள் பள்ளிப்பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமே தவிர தொழிற்சாலையை குற்றம் சொல்லக்கூடாது.
2. மேலும் நாம் அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க பல வகைகளில் சேமித்து வைக்கிறோம். இயற்கை இடர்களின் போது உணவுப்பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க உணவுக் கிடங்குகளை ஏற்படுத்துகிறோம். அதுபோல்தான் இந்த நிறுவனம் நெருக்கடி சூழ்நிலைகளில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க சேமிப்பு கொள்கலன்களை அதிகரிக்க திட்டமிட்டுள்ளது. இதனால் புதுச்சேரிக்கு எப்பொழுதும் தடையில்லாமல் சமையல் எரிவாயு கிடைக்கும். இது வரவேற்க கூடிய ஒன்றாகும்.

3. இந்த நிறுவனத்தில் தயாராகும் சிலிண்டர்களை மற்ற மாநிலங்களுக்கு அளிப்பதில் தவறில்லை. நாம் தண்ணீரை மற்ற மாநிலங்களிடம் கேட்பதுபோல்தான் இதுவும். ஒவ்வொரு மாநிலமும் சில தேவைகளுக்காக மற்ற மாநிலங்களை சார்ந்து இருக்கின்றன.

4. இந்த நிறுவனம் மூலம், எங்களைப்போன்ற 48 நுகர்வோர் அமைப்புகள் எரிபொருள் சேமிப்பு சிக்கனம் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தி வருகிறோம். மேலும் இனிமேல் இதுபோன்ற சமையல் எரிவாயு தொழிற்சாலைகளின் இன்றியமையாமை குறித்தும் பாதுகாப்பு அம்சங்கள் குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவோம்.

V. திரு. N. அருண், புதுச்சேரி அறிவியல் இயக்கம்

1. சமையல் எரிவாயு அத்தியாவசியமான ஒன்றாகும். நாளுக்குநாள் மக்கள் தொகை அதிகரிப்பதால் சமையல் எரிவாயு நிறுவனங்கள் தங்களது உற்பத்தி திறனை அதிகரிப்பது அவசியமாகும்.

2. தொழிற்சாலையால் பாதிப்பு ஏற்படுமோ என்ற பொதுமக்களின் அச்சத்தை போக்கி உரிய பாதுகாப்பு வசதிகளை தொழிற்சாலை நிறுவ வேண்டும்.

3. மற்ற மாநிலங்களில் தயாராகும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் பிற நிறுவனங்களால் புதுச்சேரியில் விற்பனை செய்யப்படுகிறது. அதுபோல் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் புதுச்சேரியில் தயாரிக்கும் சிலிண்டர்களை வெளிமாநிலங்களுக்கு கொடுப்பதில் தவறில்லை.

VI. திரு S.K. யுவராஜ், கரிகலாம்பாக்கம்

1. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் 24 வருடங்களாக எந்த பாதிப்பும் இல்லாமல் செயல்பட்டு வருகிறது.

2. நாளுக்கு நாள் சமையல் எரிவாயுவின் தேவை அதிகரிப்பதால் பொதுமக்களுக்கு பயனளிக்கும் இத்திட்டத்தை வரவேற்க வேண்டும்.

3. இந்த நிறுவனத்தை சுற்றியுள்ள கிராமங்களில் விழிப்புணர்வு முகாம் நடத்தி தொழிற்சாலை குறித்தும் அதன் பாதுகாப்பு அம்சங்கள் குறித்தும் எடுத்துரைக்க வேண்டும்.

## VII. திரு M. சிவசங்கர், தலைவர், புதுச்சேரி வர்த்தக கூட்டமைப்பு

1. புதுச்சேரியில் புதிய தொழிற்சாலைகள் வருவதை நாம் வரவேற்க வேண்டும், இதுபோன்ற இயங்கிவரும் தொழிற்சாலைகளை மேம்படுத்த ஆவண செய்யவேண்டும். ஏனெனில் புதுச்சேரியில் முன்பு இருந்த 10,000 தொழிற்சாலைகளில் ஏறக்குறைய 9,250 தொழிற்சாலைகள் புதுச்சேரியில் இருந்து வெளியேறிவிட்டன. தற்போது 750 தொழிற்சாலைகள்தான் இயங்கி வருகிறது. வேலை இல்லாத திண்டாட்டம் அதிகரித்து வருகிறது.
2. இதுபோன்ற சமையல் எரிவாயு தொழிற்சாலைகள் இல்லாத ஊர்களில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கிடைப்பதற்கு 10 நாட்களுக்கு மேல் ஆகிறது. ஆனால் புதுச்சேரியில் இந்த தொழிற்சாலை அமைந்துள்ளதால் நமக்கு 2 – 3 நாட்களில் சிலிண்டர்கள் கிடைக்கிறது.
3. இந்த தொழிற்சாலை 24 வருடங்களாக அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலை பகுதியில் இயங்கி வருகிறது. ஆனால் இதனைச் சுற்றி சில பள்ளிகள் இரண்டு ஆண்டுக்கு முன்பு தொடங்கப்பட்டது. இது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலை பகுதியாகும். எனவே இந்த பள்ளிகள் வந்ததால் தொழிற்சாலைகளின் வளர்ச்சியை நாம் தடை செய்யக்கூடாது.

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை கூறி முடித்த பின்னர், மாவட்ட ஆட்சியர் அவர்கள் பொதுமக்களின் கருத்துக்களை கவனத்தில் கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தொழிற்சாலைக்கு அறிவுறுத்தினார். மேலும் இத்திட்டத்தை துவக்குவதற்கு முன்பாக மாநில அளவில் பெறவேண்டிய அனைத்து உரிமங்களையும் வாங்குமாறு அறிவுறுத்தினார்.

அதற்குபிறகு, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை மற்றும் புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமத்தின் சுற்றுச்சூழல் பொறியாளர், இக்கூட்டத்தின் கருத்துக் கேட்புரை நடவடிக்கைகள் பற்றிய முழு விவரத்தினை பொதுமக்களுக்கு படித்துக் காண்பித்தார். அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை மற்றும் புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமத்தின் முனைவர் R. சுகாய ஆல்பிரெட், முதுநிலை அறிவியல் அதிகாரி அவர்கள் கூட்டத்தின் முடிவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூற பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் முடிவுற்றது.

பொதுமக்களின் கருத்துக்கேட்புக் கூட்டம் குறித்து செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட விளம்பரம், கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் பட்டியல், கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஒலி மற்றும் ஒளி குறுந்தகடுகள் (CD) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(Dr. சுத்யேந்திரா சிங் துர்சாவட், I.A.S.)
மாவட்ட ஆட்சியர்
புதுச்சேரி மாவட்டம், புதுச்சேரி

**GOVERNMENT OF PUDUCHERRY**
**DEPARTMENT OF SCIENCE, TECHNOLOGY & ENVIRONMENT**
**PUDUCHERRY POLLUTION CONTROL COMMITTEE**
*****

**Conduct of Public Hearing for the proposed augmentation of LPG Storage capacity from 300 MT to 900 MT by installing 2 x 300 MT mounded Storage unit by M/s. Indian Oil Corporation Limited (IOCL), Odiyampet, Villianur, Puducherry on 25.05.2017 at 09.00 AM at M/s. Gopalsamy Naikar Marriage Hall, Villianur, Puducherry**

**Attendance Sheet**

| Sl. No. | Name, Address & Phone Number | Signature |
|---|---|---|
| 1 | Mahesh Indane Gas Agency. Reddichavadi, Cuddalore. 9994455722 | [signature] |
| 2 | Justin Villinow 9943810353 | [signature] |
| 3 | S. Muruganiyan 9787936434 Killirnij Kuppm | [signature] |
| 4 | 3. [illegible] 8940443414 [illegible] | [signature] |
| 5 | R. GOPAL. NO: 31. VINAYAGAR KOIL ST VILLANUR. 9445693623 | [signature] |
| 6 | K. Subbayan No-49 I-plot 6th St Padunyen Kanvapet, villian - 605106 - Cell - 934573246 | [signature] |

| Sl. No. | Name, Address & Phone Number | Signature |
|---|---|---|
| 7 | S. Murugaiyan 9787936434<br>Killiyinikuppam | [signature] |
| 8 | ஏகேஜெயந்திரன் 8110843199<br>[illegible] | ஏகேஜெயந்திரன் |
| 9 | அன்றீன் 8940443474<br>நெட்டபக்கம் | S. [signature] |
| 10 | க. ராஜதுரை<br>புதுக்குப்பம்<br>[illegible] | Rajiji |
| 11 | R. Muthukumar 9383999105<br>Eco Services India Pvt Ltd<br>1/B Dhadwani St. Street<br>Guindy - Ch-32 | [signature] |
| 12 | S. PERIYASAMY<br>Eco Services India Pvt Ltd<br>chennai 9381999142 | [signature] |
| 13 | V. Shobanbabu. No. 9, Madha kovil st<br>villianur, Pondicherry.<br>9095476052 | [signature] |
| 14 | Prema. G<br>No: 30, Nehru Vasantha Nagar<br>Villianur<br>9095131788 | G. Prema |
| 15 | K. Prema<br>Pondichery | [signature] |

Attendance Sheet - IOCL Public Hearing on 25.05.2017

| Sl. No. | Name, Address & Phone Number | Signature |
|---|---|---|
| 16 | Timir Shah (Ultra-Tech)<br>Thane, west, Maharashtra<br>9867898844 | TBShah |
| 17 | M. VINOD (ULTRA-TECH)<br>ANNA NAGAR, SHANTI COLONY,<br>CHENNAI 7708406453 | [illegible] |
| 18 | T. Geetha 9943414670<br>NO [illegible] | T. Geetha |
| 19 | Bhuvana.<br>Reddiapalayam<br>Pondichery | [illegible] |
| 20 | S.K. YOUVARASA<br>9843055722 | S.K.Youvarasa |
| 21 | Dr. N. Arun<br>PSF<br>9894926925 | [illegible] |
| 22 | R. Sivaraman.<br>PSR 9994612553. | [illegible] |
| 23 | R. SUBRAMANIYAN<br>9994992013 | [illegible] |
| 24 | R. PRABHU<br>9443495181 | RP |

| Sl. No. | Name, Address & Phone Number | Signature |
|---|---|---|
| 25 | GUNASEKARAN<br>9600856585 | [signature] |
| 26 | Shanmugam. R<br>Nallathur<br>9629239564 | [signature] |
| 27 | R. Mohan Raj<br>No: 41 6th st puthu nagar<br>Villianur | R. Mohan Raj |
| 28 | P. Navin Kumar<br>No: 57 6th Street Pudhunagar<br>Kanuvapet, Villianur : PH: 9994745581 | [signature] |
| 29 | K. Anant<br>No 81 Ambedkar Salai Muthialpet<br>Pondicherry - 9677316590 | K. Anant |
| 30 | K. THILAKAVATHI<br>1C, IV Main Road. 9894114242<br>Mahaveer Nagar.<br>Lawspet Puducherry 8. | [signature] |
| 31 | C. Ramesh<br>No 14, 3rd cannier St, Kanuvapet.<br>Villianur. pyg. 605110<br>8870735878. | [signature] |
| 32 | M. SIVASANKAR 9443239933<br>president<br>puducherry Traders Federation | M. Sivasankar |
| 33 | Parvathy. K<br>No: 30 Brathi Nagar, Villianur<br>Puducherry. | பார்வதி |

Attendance Sheet - IOCL Public Hearing on 25.05.2017

| Sl. No. | Name, Address & Phone Number | Signature |
|---|---|---|
| 34 | D. Meera. Vatha nagar Villianur, 8056693730 | D. Meera. |
| 35 | K. Jayanth Villianur 9566688972 | K. Jay |
| 36 | M. Mathur. Villn 9944963570. | M. Mathr |
| 37 | S. Vijayakumar. Villianur. 9677771112 | S. Vijay. |
| 38 | S. Vijaya kumar Odiampet 9524352403 | S. Vijay |
| 39 | S. Arun Villianur 9524352402 | Arun |
| 40 | D. Ajay Odiampet 8526395184 | Ajay |
| 41 | நா. [illegible] 9994116466 | [illegible] 25/05/17 |
| 42 | Anjali. A Kanjamur. 8535940429 | அஞ்சலி |

| Sl. No. | Name, Address & Phone Number | Signature |
|---|---|---|
| 43 | M. VELMURUGAN<br>12, Madugarai Road,<br>Theduvar nallam.<br>Pondichey - 7 , 9677774861 | [signature] |
| 44 | L. Arul Kumaran<br>No. 12, Pillaiyar kovil St.<br>Keezh agaram<br>Villianur.<br>Pondicherry - 15 - 9600054166. | [signature] |
| 45 | P. Ayanar<br>Dinamalar<br>Pondi - 9443887585 | [signature] |
| 46 | | |
| 47 | | |
| 48 | | |
| 49 | | |
| 50 | | |
| 51 | | |